பன்னாட்டு கணித்தமிழ் மாநாடு:

தமிழ்மொழியை தகவமைத்திடும் சிந்தனைகளுக்கு ஊக்கமாக நடந்தது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, பிப். 12-

நமது திராவிட மாடல் அரசு பன்னாட்டு கணித்தமிழ் மாநாட்டை-தமிழ்மொழியை தகவமைத்திடும் சிந்தனைகளுக்கு ஊக்கமாக நடத்தப்பட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

தலைவர் கலைஞர் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய 'தமிழிணையம்-99' மாநாட்டைத் தொடர்ந்து நமது திராவிட மாடல் அரசு பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாட்டை நடத்தியுள்ளது.

இந்தக் கால் நூற்றாண்டில் இத்துறை அளப்பரிய மாற்றங்களை, வளர்ச்சியைச் சந்தித்துள்ளது. Artifical Intelligence, Machine Learning, Natural Language Processing Tools **என இன்று இணையம் மொத்தம் பரவியிருக்கும் புதிய தொழில் நுட்பங்களுக்கேற்ப நம் தமிழ் மொழியைத் தகவமைத்திடும் சிந்தனைகளுக்கு ஊக்கமாக இந்த மூன்று நாள் மாநாடு நடந்தேறியுள்ளது.**

உலகின் முன்னணி மொழிகளுக்கு இணையான வேகத்தில் தமிழ்மொழியும் தொழில் நுட்பத் துறையில் தடம்பதிக்க வித்திடும் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்களுக்கு வாழ்த்துகள்! இம்மா நாட்டின் வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் பாராட்டுகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் ரூ.6.79 கோடி மதிப்பீட்டில்

பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப்பணிகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்

அரியலூர், பிப்.12-

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.6.79 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரிஸ்வர்ணா, முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் பள்ளிகள், சாலை, குடிநீர் தேவைகள், நியாய விலைக்கடைகள், அங்கன்வாடி மையங்கள் உள்ளிட்டவைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

அதன்படி வஞ்சினாபுரம், ஆதிதிராவிடர் பகுதியில், பிரதம மந்திரி முன்னோடி கிராம திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை மற்றும் கல்வெட் அமைத்தல் பணியினையும், தொடர்ந்து நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.234.45 இலட்சம் மதிப்பீட்டில் வஞ்சினபுரம் முதல் நக்கம்பாடி சாலை வழியாக குழுமூர் ஓடையின் குறுக்கே பாலம் கட்டும் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், வஞ்சினாபுரம் ஊராட்சி, நல்லநாயகபுரம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.10.19 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை திறந்து வைத்து, அங்கன்வாடி மையத்திற்கு வருகை புரிந்த குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கி வரவேற்றார்.

தொடர்ந்து, குழுமூர் புனித பிலோமினாள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 163 மாணவ, மாணவிகளுக்கு ரூ.7.88 இலட்சம் மதிப்பீட்டில் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கியதுடன், பொதுத்தேர்வை எழுதவுள்ள 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு "தேர்வை வெல்வோம்" வினாவிடை புத்தகங்களை தனது சொந்த செலவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து மணப்பத்தூர் ஊராட்சி படைவெட்டிக்குடிகாடு கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.18.95 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி கட்டிடத்தினை திறந்து வைத்தார். தொடர்ந்து மணப்பத்தூர் ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.16.75 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீரத்தேக்க தொட்டி அமைக்கும் பணியினை துவக்கி வைத்து விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார். பின்னர், மணப்பத்தூர் ஊராட்சியில் மகாத்மாக காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.16.93 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உணவு தானிய கிடங்கினை திறந்து வைத்துப் பார்வையிட்டார். பின்னர், மணப்பத்தூர் ஊராட்சி, மணப்பத்தூர் ஊராட்சி சித்துடையார் கிராமம் ஆதிதிராவிடர் காலனி மயானத்திற்கு அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.26.37 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர், தார்சாலை மற்றும் கைபம்பு அமைத்தல் பணியினை துவக்கி வைத்தார்.

தொடர்ந்து, மணப்பத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி, சோழன்குடிகாடு அரசு உயர்நிலைப்பள்ளி, அயன் தத்தனூர் அரசு உயர்நிலைப்பள்ளி, அங்கனூர் அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் சன்னாசிநல்லூர் அரசு உயர்நிலைபள்ளிகளில் பொதுத்தேர்வை எழுதவுள்ள மாணவ, மாணவிகளுக்கு தேர்வை வெல்வோம் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கான வினா விடை புத்தகத்தினை வழங்கினார்.

பின்னர், சன்னாசிநல்லூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.16.93 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உணவு தாணிய சேமிப்பு கிடங்கினை திறந்து வைத்தார். தொடர்ந்து சன்னாசி நல்லூர் கிராமத்தில் பிரதம மந்திரி முன்னோடி கிராம திட்டத்தின்கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் காலனியில் தார் சாலை மற்றும் வடிகால் வாய்க்கால் அமைத்தல் பணியினையும், பின்னர், தளவாய் ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.263.61 இலட்சம் மதிப்பீட்டில் ஆனைவரி ஓடை முதல் ஐ.சி.எல்.கோட் சாலை குறுக்கே பாலம் கட்டும் பணியினையும், தொடர்ந்து ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.27.25 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல் பணியினையும் துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, தளவாய் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 49 மாணவ, மாணவிகளுக்கு ரூ.2.36 இலட்சம் மதிப்பிலான தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கியதுடன், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் பொதுத் தேர்வினை எளிதில் எதிர்கொள்ளும் வகையில் கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்த அரசுப்பள்ளி ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட, அனைத்து பாடப்பிரிவுகளிலும் மிக முக்கியமான வினாவிடைகள் அடங்கிய "தேர்வை வெல்வோம்" புத்தகங்களையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் கங்காதாரணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், மாவட்ட கல்வி அலுவலர் ஜெயா வட்டாட்சியர் வேலுமணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், ஜாகிர்உசைன், பள்ளித்துணை ஆய்வாளர் பழனிசாமி, ஒன்றிய செயலாளர்கள் பூ.செல்வராஜ் வி.எழில்மாறன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறிய்யாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், ஊராட்சிமன்றத் தலைவர்கள், அரசுப்பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருச்சி மா. பாலகிருஷ்ணன்

பிப்ரவரி 12 (2010)

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

புரவலர் அன்பிலாருடன் இணைந்து பணியாற்றி பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

திருச்சி நகர்மன்றத் தலைவராக திறம்பட பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக வாழ்நாளின் இறுதிவரை இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

வேளாண் நிதிநிலை அறிக்கை தொடர்பாக

500க்கும் மேற்பட்ட விவசாயிகளிடம் கருத்துக்கேட்பு!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் காணொலி மூலம் கேட்டறிந்தார்!

சென்னை, பிப்.12-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் 2024-25-ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கை தொடர்பான கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது.

வேளாண்மை உற்பத்தியில் தன்னிகரில்லா வளர்ச்சியை பெறுவதற்கும், உழவர் பெருமக்களின் வருமானத்தை அதிகரித்து, அவர்களின் நலன் காத்திட முதலமைச்சர் அவர்களின் ஆணைகளுக்கிணங்க கடந்த 2021-22 ஆம் ஆண்டு முதல் வேளாண்மைக்காக தனி நிதிநிலை அறிக்கை வழங்கப்பட்டு வருகின்றது. நிதி நிலையினை தயாரிப்பதற்கு முன்பாக மாவட்டந்தோறும் உள்ள விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள், இடுபொருட்கள் விநியோகிப் பவர் சங்கப் பிரதிநிதிகள், விளைபொருட்கள் கொள்முதலாளர்கள், ஏற்றுமதியாளர்கள், விதை உற்பத்தியாளர்கள் போன்ற அனைவரிடமும் கருத்துக்கள் கேட்கப்படுகின்றது.

2024-25-ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் பொருட்டு 2 முறை சென்னை தலைமைச் செயலகத்திலும், கடந்த 6.2.2024 அன்று தஞ்சாவூரில் டெல்டா மாவட்டத்தைச் சார்ந்த பிரதிநிதிகளுடன் கருத்துக்கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, நேற்று (10.2.2024) வேளாண்மை- உழவர்நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் டெல்டா மாவட்டங்கள் அல்லாத பிற மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகளிடத்தில் காணொளி வாயிலாக கருத்துக்கேட்புக் கூட்டம் வேளாண்மை இயக்குநரகத்தில் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளை வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ் வரவேற்றார். கருத்துக் கேட்புக் கூட்டத்தின் நோக்கம் குறித்து வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா உரையாற்றினார்.

வேளாண்மை -உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கருத்துக்கேட்புக் கூட்டத்தை துவக்கி வைத்து பேசுகையில், ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை-உழவர் நலத்துறை நிதிநிலை தயாரிப்பதற்கு முன்பாக விவசாயி களின் கருத்துக்களை கேட்டறிந்து அதன்படி திட்டங்களை வகுத்து வருகின்றது. 2021-22 ஆம் ஆண்டில் 268 விவசாயிகளிடத்தும், 2022-23-ஆம் ஆண்டில் 382 விவசாயிகளிடத்தும், 2023-24-ஆம் ஆண்டில் 421 விவசாயிகளிடம் கருத்துக்கள் கோரப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் 19 கருத்துக் கேட்புக்கூட்டங்கள் நடத்தப்பட்டு, விவசாயிகளின் 548 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த அரசு கிராமங்களை நாடிச்செல்லும் அரசாக இருந்து வருகின்றது என்பது விவசாயிகள் நன்கு அறிந்ததாகும். கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள விவசாயிகள் தங்களுடைய அனுபவத்தில் தங்கள் பகுதி விவசாயிகள் நலனிற்காக தேவைப்படும் திட்டங்களை தெரிவித்திட கேட்டுக் கொண்டார்கள். அரசு விவசாயிகளின் கருத்துக்களை நன்கு ஆராய்ந்து, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2024-25ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையினை தயாரித்திடும் என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர். இக்காணொளிக் கூட்டத்தில் ஏறக்குறைய 500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த

தொழில்களை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கேள்வி

நாமக்கல், பிப். 12-

ஒன்றிய அரசு கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன? என மாநிலங்களவையில் நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான. கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான .கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஒன்றிய அரசு கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என கேள்வி எழுப்பினார். அதில் நாட்டில் உள்ள கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? கடந்த ஐந்தாண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறு வனங்களுக்கான ஒன்றிய அமைச்சர் ஸ்ரீ பானு பிரதாப் சிங் வர்மா, அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம், காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (கே.வி.ஐ.சி) மூலம், விவசாயம் உட்பட பண்ணை அல்லாத துறைகளில் புதிய அலகுகளை அமைப்பதில் தொழில் முனைவோருக்கு உதவுவதற்காக பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் சார்ந்த தொழில்களுக்கு பொதுப் பிரிவு பயனாளிகள் கிராமப்புறங்களில் திட்ட மதிப்பில் 25% மானியமும், நகர்ப்புறங்களில் 15% மானியமும் வழங்கப்படுகிறது. இதில் பட்டியல் சமூகத்தினர், பழங்குடியினர், ஒபிசிகள், சிறுபான்மையினர், பெண்கள், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், வடகிழக்கு மண்டலம், மலை மற்றும் எல்லைப் பகுதிகளைச் சேர்ந்த பயனாளிகள் மற்றும் ஆர்வமுள்ள மாவட்டங்கள் போன்ற சிறப்புப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு,

மார்ஜின் மணி மானியம் கிராமப்புறங்களில் 35% மற்றும் நகர்ப்புறங்களில் 25%. தவிர, பொதுப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகள் திட்டச் செலவில் 10% பங்களிப்பையும், சிறப்புப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகள் திட்டச் செலவில் 5% பங்களிப்பையும் வழங்கப்பட்டு வருகிறது.

2018-19 முதல், 2 வது நிதி உதவி ரூ. 1 கோடி சிறப்பாக செயல்படும் தற்போதைய அலகுகளை மேம்படுத்துதல் மற்றும் விரிவாக்கம் செய்வதற்காக 15% மற்றும் மலைப்பகுதிகளுக்கு 20% மானியமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்கள் உட்பட கிராமத் தொழில்களை ஊக்குவிக்கும் விதமாக இரண்டு நாள் இலவச ஆன்லைன் தொழில்முனைவோர் மேம்பாட்டுத்திட்டம், வருங்கால தொழில்முனைவோருக்காக காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையமும் உள்ளது. அத்தோடு 1056 மாதிரி விரிவான திட்ட அறிக்கைகள் போர்ட்டலில் வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் மற்றும் வருங்கால தொழில்முனைவோரின் விழிப்புணர்விற்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குறுந்தொழில்களை அமைப்பதற்கான பல்வேறு செயல்பாடுகள் குறித்து வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதனால் சந்தைப்படுத்தவும், தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்ய கண்காட்சிகள் மற்றும் ஆன்லைன் மூலம் விற்பனை செய்யவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் குறித்து குறும்படங்கள், விழிப்புணர்வு பட்டறைகள், முகாம்கள், பிராந்திய மொழிகளில் ரேடியோ லிங்குகள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

வருங்காலத்தில் தொழில் முனைவோர் மற்றும் பயனாளிகள் பயிற்சி முறையை தேர்வு செய்து, தங்களுக்கு விருப்பமான ஆஃப்லைன் பயன்முறையில் பயிற்சி மையத்தை தேர்வு செய்யலாம். இதற்காக போர்ட்டலில் உள்ள ஆறு பிராந்திய மொழிகளில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

புதுக்கோட்டையில் ஒன்றிய அரசின் மாநில உரிமைகள் மீதான தாக்குதலைக் கண்டித்து

தி.மு.க. - சி.பி.எம்.- தோழமைக் கட்சிகள் ஆர்ப்பாட்டம்! கே.கே.செல்லப் பாண்டியன் கண்டன உரை!

கவிச்சுடர் கவிதைப் பித்தன் - டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ - எம். சின்னத்துரை எம்.எல்.ஏ - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, பிப்.12-

தொடர்ந்து மாநில உரிமைகள் மீது தாக்குதல் நடத்தி வரும் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு கண்டித்து திமுக தலைமையிலான தோழமைக் கட்சிகளுடன் இணைந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் புதுக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எதிர்க்கட்சிகள் ஆளக் கூடிய மாநிலங்களுக்கு உரிய நிதிப்பகிர்வை அளிக்க மறுப்பது, பேரிடர் நிவாரண நிதியை ஒதுக்க மறுப்பது, ஜிஎஸ்டி வரியில் உரிய பங்கீட்டை அளிக்க மறுப்பது, மாநிலங்களின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போடுவது என கூட்டாட்சி கோட்பாட்டிற்கு விரோதமான நடவடிக்கைகளை கையாண்டு வரும் மோடி தலைமையிலான ஒன்றிய அரசைக் கண்டித்து புதுதில்லியில் கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை (பிப்.8) தர்ணா போராட்டம் நடைபெற்றது. இதனையொட்டி நாடு முழுவதும் வியாழக்கிழமை (8.2.2024) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கண்டன போராட்டம் நடைபெற்றன. அதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை சின்னப்பா பூங்கா அருகில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டின் கண்டன உரையாற்றினார்.

இதில் சிபிஎம் மாநில செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சின்னதுரை (கந்தர்வ கோட்டை), வை.முத்துராஜா (புதுக்கோட்டை), தி.மு.க. இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், நகரச் செயலாளர் ஆ.செந்தில், சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர் த.சந்திர சேகரன், சிபிஐ மாவட்டச் செயலாளர் த.செங்கோடன், மதிமுக மாவட்டச் செயலாளர் கே.கலியமூர்த்தி, விசிக மாவட்டச் செயலாளர்கள் இளமதி அசோகன், கரு.வெள்ளைநெஞ்சன், இராம.தமிழ்ச்செல்வன், மனிதநேய மக்கள் கட்சி முகமது கனி, திக. நகரத் தலைவர் தர்மராஜன்,

திமுக நகர செயலாளர் ஆ.செந்தில், விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திரசேகரன், விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கே.ஆர்.என்.போஸ், தொண்டர் அணி துணை செயலாளர் சுப. சரவணன், மாவட்ட அவை தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.எஸ்.கருப்பையா, ஸ்ரீதேவி அண்ணாத்துரை, மாவட்ட பொருளாளர் எம். லியாகத் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் சு.சண்முகம், பொதுக்குழு உறுப்பினர்கள் என். சாத்தையா, சி.ஆர். வி.சித்ரா, ஆர்.வி.செல்வம், கே.எம்.சுப்பிரமணியன், கலைவாணி சுப்பிரமணியன், அறந்தாங்கி நகர செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் தவ. பாஞ்சாலன், என்.சேட்டு, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மா.தமிழ் அய்யா, சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், வே.பொன்துரை, பொன். கணேசன், கே.பி.கே.டி.தங்கமணி, ஆ.முத்து, அரு.வடிவேலு, அழகு சிதம்பரம், வி.ஆர். இளையராஜா, குமார் (எ) வைரக்கண்ணு, பேரூர் கழக செயலாளர்கள் ஆ.பழனிக்குமார், செந்தில் (எ)நாசர்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் த.மணி ராஜன், எம்.எம்.பாலு, அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, சி.அரங்கநாயகம், வி.என்.எம்.பாலு, க.கவி வேந்தன், வி.ஜி.ஆர்.மணி வண்ணன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, எம்.சுப்பையா, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, ஹரி விமலாதி, தி.முத்து, சக்திவேல், பாத்திமா பீவி. அ.பிரபா, எம்.தேவி, மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், முகம்மது ரபீக், மாலா ராஜேந்திரதுரை, கமலா செல்வம், அ.வெற்றிச்செல்வம், சுப. துரைராஜா, கை. பழனிச்சாமி, பெ.தெய்வானை, ஆர்.கே.ரெத்தினசபாபதி, ராஜ பெரியண்ணன், எம்.ரமேஷ், கே.எம். கே.ரவிக்குமார், வி. எஸ். பழனி, எம்.ஏ.எம். இம்தியாஸ், ஆ. மரிய எட்வின், நகர நிர்வாகிகள் ரெங்கராஜ், மணிவேலன், ஞானசேகரன்,ஆ.நாக ராஜ், கே.வி.எஸ்.ஏ. மோகன், சி. மதியழகன், பால்ராஜ், அப்புக்காளை, செந்தில் வேலன், வழக்கறிஞர் சின்னத்துரை, திருமயம் ராஜன், முல்லை ரமேஷ், அண்ணாத்துரை, ராஜமாணிக்கம், சாமி சுரேஷ், க.செல்லையா, ரவீஸ் ரவி, க.செ.கலியமூர்த்தி, லாசர், மேல விடுதி ஆறுமுகம், வி.ஏ.டி.சி ராஜேந்திரன், சுப்ரமணியன், ஆதீஸ்வரன், சாங்கிராப்பட்டி ரவி, ஆர்ட்டிஸ்ட் முருகேசன், பிரேம் ஆனந்த், எம்.கே.அறிவுடைநம்பி, ஏ.எம்.சிற்றரசு, முனியாண்டி, ஓவியா, சதீஷ், அதாவுல்லா, தியாகு, விஜயக்குமார், கண்மணி சுப்பு, மற்றும் எல் ஐ.சி ஆரோக்கியசாமி, மாரிமுத்து, ஹென்றி ஏராளமான கலந்து கொண்டனர்.